BRAMPTON Flower City
brampton.ca

media release

உடனடி வெளியீட்டுக்காக

# குடும்ப வன்முறையை ஒரு முடிவுக்கு கொண்டுவருவதற்காக பொதுமக்களுக்கு கல்வியறிவு புகட்டல் மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்வதற்காக ப்ராம்ப்ட்டன் மாநகரம் பங்கேற்பாளர்களை நாடுகிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜனவரி 29, 2020) – ப்ராம்ப்ட்டன் மாநகர மன்றக் குழுவானது, அதன் மன்றக் கூட்டத்தில், பிராந்தியக் கவுன்சிலராகிய ரோவெனா சாண்ட்டோஸ் அவர்களால் முன்வைக்கப்பட்ட ஒரு மசோதாவுக்கு அங்கீகாரம் அளித்தது; இதன்படி, பீல் பிராந்திய போலீஸ், பீல் பிராந்தியம் மற்றும் சமுதாய நிறுவன அமைப்புகள் ஆகியவை ஒன்று சேர்ந்து, ப்ராம்ப்ட்டன் மற்றும் பீல் பிராந்தியத்தில் குடும்ப வன்முறையை ஒரு முடிவுக்கு கொண்டுவருவதற்காக, பொதுமக்களுக்கு கல்வியறிவு புகட்டல் மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரம் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

செப்டம்பர் 2019 இல், குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டோருக்காக சேவைகளை அளிக்கின்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளிக்கவும், அவர்களுடன் சேர்ந்து பணியாற்றவும் ஒரு மசோதா ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது; இந்த நிகழ்ச்சித் திட்டங்களில் பெண்கள் மீதான துன்புறுத்தலுக்கு எதிரான பீல் கமிட்டி [Peel Committee Against Woman Abuse (PCAWA)], சேஃப் சென்ட்டர் ஆஃப் பீல் (Safe Centre of Peel) மற்றும் விக்டிம் சர்வீசஸ் ஆஃப் பீல் (Victim Services of Peel) ஆகியவையும் அடங்கும்.

கடந்த ஆண்டில், 100க்கும் மேற்பட்ட குடியிருப்புவாசிகள், மாநகர அலுவலர்கள் மற்றும் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்கள் ஆகியோர், PCAWA வினால் சிட்டி ஹாலில் (City Hall) முன்னணி வகித்து நடத்தப்பட்ட டேக் பேக் தி நைட் (*Take Back the Night)* எனும் இயக்கத்தில் பங்கேற்றனர்.

ரீஜன் ஆஃப் பீல் (Region of Peel) எனும் அமைப்பினால் வழிநடத்தப்பட்ட சமுதாயப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கான கட்டமைப்பின் தலைமைத்துவ இயக்கத்தில் (Community Safety and Well-being System Leadership Table) ப்ராம்ப்ட்டன் மாநகரம் பங்கேற்கிறது. இந்த கட்டமைப்பின் தலைமைத்துவ இயக்கத்தின் முழுக்கவனமும் *ரீஜன் ஆ பீல்* (Region of Peel) பகுதிக்குள்ளாக, சமுதாயத்தினரின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வில் ஏதிர்மறை பாதிப்பு உண்டாக்குகின்ற பிரச்சனைகளுக்கான ஆணி வேர்களைக் கண்டறிந்து, அவற்றுக்கு தீர்வுகாணும் வகையிலான யுக்திகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதேயாகும். இந்தக் குழுவின் ஒரு பெரிய செயலானது, குடும்ப வன்முறை என்னும் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கென்றே அர்ப்பணிக்கப்பட்டது; இதற்கு குடும்ப வன்முறைக்கு எதிரான செயல் இயக்கம் என்னும் பெயரிடப்பட்டது.

பீல் பிராந்திய போலீஸ் (Peel Regional Police) என்பது ப்ராம்ப்ட்டன் குடியிருப்பு வாசிகளுக்கான பலதரப்பட்ட தகவல்கள் மற்றும் உள்ளூரில் கிடைக்கின்ற ஆதாரவளங்களை வழங்குகிறது; அவற்றில் அடங்குபவை: உதவி நாடுவதற்கான பாதுகாப்பான இடங்கள், தங்கவைக்கும் இடங்கள், சமுதாய

மட்டத்திலான ஆலோசனையளித்தல், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆதரவளிக்கும் சேவைகள், குழந்தைகள் மற்றும் வயதானோருக்கான சட்ட ஆலோசனைக்கான வசதிகள்.

பிப்ரவரி 5, 2020 தேதியன்று, கவுன்சிலின் ஒப்புதலைத் தொடர்ந்து, இந்த பிரச்சாரத்தை முழுவீச்சில் மேற்கொள்வதற்கும், குடும்ப வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், அனைவருக்கும் பாதுகாப்பான ஒரு நகரத்தை உருவாக்குவதற்கும் இந்த மாநகரமானது தங்களுடன் சேர்ந்துகொண்ட பீல் பிராந்தியம் (Region of Peel), பீல் பிராந்திய காவல்துறை (Peel Regional Police) மற்றும் இதர சமூக அமைப்புகள் உள்ளிட்ட அனைத்து உள்ளூர் பங்குதாரர்களுடன் நெருக்கமாக செயல்படும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

"வீட்டு வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருவது பிராம்ப்டன் நகர சபைக்கு முக்கியமான ஒரு காரியமாகும். ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான சமூகத்தை உருவாக்குவதற்காக இந்தக் கவுன்சில் செயல்படும் அதே வேளையில், குடும்ப வன்முறை பற்றிய பொது விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், அதனை தெரியப்படுத்த ஊக்குவிக்கவும் வேண்டும்; ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்களின் உணர்வுரீதியான மற்றும் நிதி ரீதியான துஷ்பிரயோகங்களை எதிர்த்துப் போராடுவதற்கும் பிராந்தியஅரசு மட்டத்திலும் மற்றும் பீல் பிராந்திய காவல்துறையிலும் எங்களுடன் கூட்டாக செயல்படுபவர்களுடன் இணைந்து பணியாற்ற நாங்கள் அதிகம் முயற்சி செய்வோம்."

- *பேட்ரிக் பிரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் மாநகரம்*

"குடும்ப வன்முறை என்பது ப்ராம்ப்ட்டனில் சமூக பாதுகாப்பு பற்றி அதிகரித்து வரும் கவலையாகும். குடும்ப வன்முறையை எதிர்த்துப் போராடுவதில் அதுபற்றிய அறிவு மற்றும் விழிப்புணர்வு ஆகியவை பங்களிப்பு விஷயங்களாக இருந்து, சிக்கலைக் கையாள்வதற்கான முக்கிய செயல்பாட்டு உத்திகளாகவும் உள்ளன; அதனால்தான் ஒரு பொது விழிப்புணர்வு பிரச்சாரத்தை உருவாக்குவதற்கான ஆதார வளங்களை நாங்கள் முடுக்கி விடுகிறோம். குடும்ப வன்முறை தொடர்பான துஷ்பிரயோகம் மற்றும் அதனால் ஏற்படும் மரணங்கள் கவலைக்குரியவையாகும் மற்றும் முற்றிலும் நியாயமற்றவையாகும். அனைவரும் எங்கு இதற்கான ஆதரவைப் பெற முடியும் மற்றும் அந்த ஆதரவினினை எந்த அளவுக்கு அதிகரிக்க முடியும் என்பதை ஒவ்வொருவருக்கும் தெரிய வைக்க வேண்டும் என்றும் நாங்கள் விரும்புகிறோம்."

- *ரோவெனா சான்ட்டோஸ், தலைவர், சமூக சேவைகள்; பிராந்திய ஆலோசகர், வார்டுகள் 1 & 5, ப்ராம்ப்ட்டன் மாநகரம்*

"குடும்ப வன்முறைக்கு ஆளாகக்கூடிய பெண்களுக்கு, விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் கூட்டு சேர்ந்து அவர்களைப் பாதுகாப்பதற்கும் சமூக அமைப்புகளுடன் கூட்டு சேருவது ப்ராம்ப்ட்டன் மாநகரத்திற்கு மிகவும் முக்கியமானது என்று நான் நினைக்கிறேன்."

- *பல்தேவ் முட்டா, த்லைமை செயல் அதிகாரி, பஞ்சாபி சமுதாய சுகாதார சேவைகள் அமைப்பு*

“வன்முறையற்ற அமைதியான வாழ்க்கை வாழ அனைவரும் தகுதியானவர்கள். எங்கள் சமுதாயத்தில் இருக்கின்ற பெண்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளின் வாழ்க்கையில் வன்முறையை அகற்றுவதில் நம் அனைவருக்குமே முக்கிய பங்கு இருக்கிறது."

- *ஷரோன் ஃப்ளாய்ட், செயல் இயக்குனர், இன் ட்டெரிம் ப்ளேஸ்*

“இந்த முக்கியமான காரணத்திற்காக ப்ராம்ப்ட்டன் நகர அலுவலர்கள் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் உள்ளனர் மற்றும் குடும்ப வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு உள்ளூர் பங்களிப்பாளர்களுடன் ஒத்துழைக்கின்றனர். சமுதாயம், மற்றும் எங்கள் பிராந்திய அரசு மற்றும் சட்ட அமலாக்க பங்களிப்பாளர்களுடன் சேர்ந்து, பொது மக்களுக்கான இந்த அறிவை வளர்த்து, விழிப்புணர்வு பிரச்சாரத்தை நாங்கள் மேற்கொள்ளும் சமயத்திலேயே, சமூக பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கான கட்டமைப்பின் தலைமைத்துவம்(Community Safety and Well-being System Leadership Table) மூலம் ஏற்கனவே நடைபெற்று வரும் முக்கியமான பணிகளை விரிவுபடுத்தியவாறும் இருக்கிறோம்.”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் மாநகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca